# கொங்கு நண்பர்கள் இதழ்

பதிவு எண். : 248/2012

திருவள்ளுவர் ஆண்டு 2042 (ஆனி–ஆடி) ஜீலை 2012 ஏர்-01, உழவு-07, விலை ரூ.10.00

பதிப்பாளர் :
கே.பாலசுப்ரமணி
கொங்கு நண்பர்கள் இதழ்
ஆசிரியர் & பதிப்பாளர்
H-71, 5வது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை – 600 102.

அச்சகம் :
பிராம்ட் ஆப்செட் பிரிண்டர்ஸ்
நெ.49/37, வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.


## இந்த இதழில்


| | | | |
|---|---|---|---|
| பொருளடக்கம் | 1 | நிலம் கையப்படுத்துதல் | 11 |
| தலையங்கம் | 2 | இல்வாழ்க்கையின் இன்பம் | 14 |
| கட்டட நிதி | 3 | விளம்பர வேண்டுகோள் | 16 |
| வேண்டுகோள் | 4 | என்றும் நலமுடன் வாழ | 19 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | 5 | நூல் மதிப்புரை | 21 |
| குடும்பவிழா 2012 | 6 | மணமகள் தேவை | 24 |
| வேண்டுக்கோள் | 8 | மணமகள் தேவை | 28 |
| வாழ்த்துகிறோம் | 9 | மணமகன் தேவை | 31 |
| ஆலோசனை கடிதம் | 10 | | |


### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / கொங்கு நண்பர்கள் இதழ் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு, வணக்கம்.



1961 ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கப்பட்ட சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், 50 ஆண்டுகளைக் கடந்து, சீரோடும் சிறப்போடும் கொங்கு சமுதாய மக்களுக்காக, குறிப்பாக மாணவ, மாணவிகளுக்கும், மகளிருக்கும், இளைஞர்களுக்கும் சேவையாற்றி வருவதுடன் சாதனைகள் பல புரிந்துள்ளதைக் குறிக்கும் வகையில், இந்த ஆண்டு குடும்பவிழா பொன்விழாவாக 02–09–2012 அன்று சென்னை காமராஜர் அரங்கத்தில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் மாதாந்திர வெளியீடாக இதுவரை வெளிவந்த 'செய்தி மடல்' இந்த மாதம் முதல் 'கொங்கு நண்பர்கள் இதழ்' என்ற பெயரில் தற்போதைய விதிகளின்படி புதிதாகப் பதிவு செய்யப்பட்டு (பதிவு எண். 248/2012) வெளிவருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விதிகளின்படி பதிப்பாளர் மற்றும் ஆசிரியராக உள்ள என்னுடைய விலாசம் இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொங்கு சாதனையாளர்களுக்கு விருதுகள், பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்புத் தேர்வுகளில் கொங்கு சமுதாயத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்ற மாணவர்களுக்குப் பரிசு, பணமுடிப்பு ஆகியன வழங்கப்பட உள்ளன என்பதை அறிவீர்கள். உங்கள் பகுதியில் உள்ள தகுதியான மாணவ, மாணவியர்கள், சாதனையாளர்கள் பற்றிச் சங்கத்திற்குப் பரிந்துரை செய்ய வேண்டுகிறோம்.

பரிசு மற்றும் விருதுகள் வழங்குதல், கிராமியக் கலை நிகழ்ச்சிகள், காலை மற்றும் மதியம் அறுசுவை விருந்து, அதிர்ஷ்டப் பரிசுகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், பொன்விழா மலர் மற்றும் சங்க வரலாற்று நூல் வெளியீடு, சான்றோர் உரைகள், விழா முடிந்து வீட்டிற்குச்செல்லும் போது மனம் நிறைய மகிழ்ச்சியுடன் பை நிறைய அன்பளிப்புகள் முதலான சிறப்பம்சங்கள் கொண்டுள்ள இந்தச் சிறப்புமிகு பொன்விழாவிலும், 05–08–2012 அன்று நடக்க இருக்கும் விளையாட்டு விழா, 22–07–2012 அன்று நடக்க விருக்கும் குழந்தைகள் விழா ஆகியவற்றிலும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறோம். குடும்பத்தோடு அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என அன்புடன் அழைக்கின்றேன்.

நமது சங்கத்தின் சார்பாக கிண்டியில் உள்ள தீரன் சின்னமலை திருவுருவச்சிலைக்கு தீரன் சின்னமலை நினைவு நாளான ஆடிப்பதினெட்டு (02–08–2012) அன்று காலை 8.00 மணிக்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்யப்பட உள்ளது. கொங்கு சொந்தங்கள் அனைவரும் தியாக மறவனுக்கு அஞ்சலி செலுத்த தவறாமல் வருகை தர வேண்டுகிறோம்.

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

நன்றி! வணக்கம்!

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 71,94,936 |
| 1629 | | T.சண்முகப்பிரியா | 1000 |
| 1630 | | P.ஹரித்தா | 1000 |
| 1631 | | A.தமிழரசு | 1000 |
| 1632 | 2385 | N.நல்லசாமி | 1000 |
| 1633 | | P.நல்லுசாமி | 1000 |
| 1634 | | S.கதிரேசன் | 1000 |
| 1635 | 2563 | S.பொன்னுசாமி | 1000 |
| 1636 | 2017 | P.தங்கமுத்து | 1000 |
| 1637 | 2018 | C.சண்முகசுந்தரம் | 1000 |
| 1638 | 2171 | V.K.அசோகன் | 1000 |
| 1639 | 2172 | S.ஆறுசாமி | 1000 |
| 1640 | 2173 | R.குணசேகரன் | 1000 |
| 1641 | 1979 | R.துரைசாமி | 1000 |
| 1642 | 1439 | C.T.முத்துசாமி | 1000 |
| 1643 | 0592 | R.முருகவேல் | 1000 |
| 1644 | 1782 | S.சுப்பிரமணியம் | 1000 |
| 1645 | 3074 | K.விஸ்வநாதன் | 5000 |
| 1646 | | G.R.மலைச்சாமி | 1000 |
| 1647 | | P.மெய்ஞானமூர்த்தி | 1000 |
| 1648 | | M.ஈஸ்வரமூர்த்தி | 1000 |
| 1649 | | V.A.அருணாச்சலம் | 1000 |
| 1650 | | P.சண்முகம் | 1000 |
| 1651 | | K.பாலசுப்பிரமணியம் | 1000 |
| 1652 | | G.சதாசிவம் | 1000 |
| 1653 | | P.தமிழ்ச்செல்வன் | 1000 |
| | | | 72,23,936 |

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்கனவே செய்தி மடல் வாயிலாக பலமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள அடையாள அட்டை மாதிரி விண்ணப்பத்தில் தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து, இதுவரை சங்கத்திற்கு அனுப்பாதவர்கள், உடனே அனுப்பும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சங்கத்தின் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும், சங்கம் அளித்துவரும் சலுகைகளைப் பெறுவதற்கும் புதியதாக வழங்கப்படவுள்ள அடையாள அட்டை அவசியம் தேவைப்படும். எனவே இதுவரை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பாத உறுப்பினர்கள் இனியும் காலம் தாழ்த்தாது உடனே அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'தீரன் சின்னமலை மாளிகை' கட்டட நிதிக்கு இதுவரை ரூ. 1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்கள், உடனே அனுப்பிட அன்புடன் வேண்டுகிறோம். ரூ.1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதால், கட்டட நிதியை உடனே சங்கத்திற்கு அனுப்புமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

❖❖❖❖❖

## சங்கச் செய்தி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி மாற்றப்பட்டுள்ளது.

www.kongunanbargalsangam.com

உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தைப் பயன்படுத்தி சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம். 'கொங்கு நண்பர்கள் இதழ்' இந்த இணையதளத்தில் முழுமையாக வெளியிடப்படுகிறது. உலக முழுவதிலும் உள்ள கொங்கு சொந்தங்கள் இதைப்படித்துப் பயன்பெறலாம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**
நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :
Name / பெயர் :
Father's Name / தகப்பனார் பெயர் :
Date of Birth / பிறந்த தேதி :
Edu. Qualification / கல்வித்தகுதி :
Occupation / தொழில் :
Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address<br>சொந்த ஊர் முகவரி | Present Address<br>தற்போதைய முகவரி | Office Address<br>அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number: E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name<br>உறுப்பினர் பெயர் | Date of Birth<br>பிறந்த தேதி | Relationship<br>உறவுமுறை | Education / Employment<br>படிப்பு / தொழில் | Blood Group<br>இரத்தப் பிரிவு | Land Line / Mobile<br>தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

# 2012 ஆம் ஆண்டுக்கான சாதனையாளர் விருது மற்றும் இளம் சாதனையாளர் விருது

சங்கத்தின் சார்பில் சென்னையில் நடைபெற உள்ள 50ம் ஆண்டு நிறைவு- பொன் விழாவில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமைதேடித் தந்துள்ள சாதனையாளர்களுக்கு " கொங்கு சாதனையாளர்" விருதும், படித்துக்கொண்டு இருக்கும் போதே தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு 'கொங்கு இளம் சாதனையாளர்' விருதும் வழங்கப்பட உள்ளன. இந்த இனிய பொன் விழா காமராஜர் அரங்கத்தில் 02-09-2012 அன்று நடைபெற உள்ளது. 2012 ஆம் ஆண்டிற்கான 'கொங்கு சாதனையாளர்' விருது மற்றும் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்குவதற்குப் பரிசீலனை செய்திட, தங்களுக்குத் தெரிந்த, தங்கள் பகுதியைச் சார்ந்த சாதனையாளர்களின் விபரங்களைப் புகைப்படத்துடன் சங்க அலுவலகத்திற்கு ஜுலை 31ம் தேதிக்குள் அனுப்பிவைக்குமாறு சங்க உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- ஆர்.செல்வராஜ், செயலாளர்

❖❖❖❖❖

# 10 மற்றும் +2 மாணவர்களுக்குப் பணமுடிப்பு, பதக்கம்

2012 ஆம் ஆண்டு 02-09-2012 அன்று நடைபெறவிருக்கும் 50ம் ஆண்டு நிறைவு - பொன்விழாவில் இவ்வருடம் 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றுள்ள முதல் மூன்று கொங்குச் சமுதாய மாணவ, மாணவிகளுக்கு வெள்ளிப்பதக்கமும், பணமுடிப்பும் வழங்கப்படும். விழாவிற்கு வந்துபோக பயணக்கட்டணம், தங்கும் வசதி போன்றவை அளிக்கப்படும். தகுதியுடைய மாணவ, மாணவியர் சங்கத்திற்கு ஜுலை 31ம் தேதிக்குள் விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்துடன் சமுதாயச் சான்றிதழ் நகல், மதிப்பெண் பட்டியல் நகல், புகைப்படம் ஆகியவை கட்டாயம் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

- ஆர்.செல்வராஜ், செயலாளர்

❖❖❖❖❖

# பொன்விழா 2012

## கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, மாறுவேடப்போட்டி, நடனப்போட்டி, பாட்டுப்போட்டி, ஓவியப்போட்டி மற்றும் கோலப்போட்டி

02-09-2012 அன்று நடைபெறவிருக்கும் 50 ஆண்டு நிறைவு பொன்விழாவை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மணிகளுக்கான கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, குழந்தைகளுக்கான மாறு வேடப்போட்டி, ஓவியப்போட்டி, நடனப்போட்டி, பாட்டுப்போட்டி, பெண்களுக்கான கோலப்போட்டி ஆகியன நடத்தப்பட உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த மூன்று கவிதைகளுக்கும், கட்டுரைகளுக்கும் பரிசுகள் வழங்கப்படுவதுடன் அவை செய்தி மடலில் பிரசுரிக்கப்படும். பேச்சுப்போட்டியில் முதல் பரிசு பெறுபவர்கள் பொன் விழாவில் உரையாற்றுவார்கள்

**கட்டுரைப்போட்டி :–**

1. கல்லூரி மாணவர்களுக்கான தலைப்பு
   'நாட்டில் நடக்கும் சீர்கேடுகளைத் தடுக்க"
2. பள்ளி மாணவர்களுக்கான தலைப்பு
   "சமச்சீர் கல்வி"

**விதிகள் :–**

அ) கட்டுரை இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
ஆ) சொந்தக் கையெழுத்தில் இருக்க வேண்டும்.

**கவிதைப்போட்டி :–**

3. கல்லூரி மாணவர்களுக்கான தலைப்பு
   'தமிழ்'
4. பள்ளி மாணவர்களுக்கான தலைப்பு
   'அன்பு'

**விதிகள்** :-

அ) கவிதை 12 வரிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
ஆ) சொந்தக் கையெழுத்தில் இருக்க வேண்டும்.
இ) இதுவரை வேறெங்கும் வெளிவராததாக இருக்க வேண்டும்.
**கவிதை மற்றும் கட்டுரை வந்து சேரவேண்டிய கடைசி தேதி 20–07–2012**

**அனுப்ப வேண்டிய விலாசம் :**
செயலாளர், கொங்கு நண்பர்கள் சங்கம், 34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை- 600 0014.

**பேச்சுப்போட்டி :–**

1. கல்லூரி மாணவர்களுக்கான தலைப்பு
'நான் இந்திய பிரதமர் ஆனால்'
2. பள்ளி மாணவர்களுக்கான தலைப்பு
'நான் தமிழக முதல்வர் ஆனால்'

**விதிகள் :–**

பேச்சு 5 நிமிடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்
பேச்சுப்போட்டி, மாறுவேடப்போட்டி, ஓவியப்போட்டி, நடனப்போட்டி, பாட்டுப்போட்டி, கோலப்போட்டி ஆகியன நடைபெறும் தேதி : 22-07-2012 காலை 9 மணி. இடம் : வெள்ளிவிழா இல்ல அரங்கம், இராயப்பேட்டை, சென்னை - 14. போட்டிகளுக்குத் தேவையான பொருட்களையும், உபகரணங்களையும் போட்டியில் பங்கேற்போரே ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். மதிய உணவு உண்டு.
**விளையாட்டுப்போட்டி** : 05–08–2012 மதியம் 2.00 மணி முதல் 6 மணி வரை வெஸ்லி மேல்நிலைப்பள்ளி மைதானம், இராயப்பேட்டை, சென்னை

❖❖❖❖

## வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 50 ஆண்டுகளைக் கடந்து 02–09–2012 அன்று பொன்விழாவைக் கொண்டாட உள்ளதையொட்டி, 50 ஆண்டு கால சங்க வரலாற்று நூல் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி, செயல்பாடுகள், சாதனைகள், சங்கத்திற்காக உழைத்தவர்கள், 1961 ஆம் ஆண்டு முதல் 1992 வரை சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் பெயர் போன்றவைகள் குறித்து தங்களுக்குத் தெரிந்த செய்திகள் நூலாக்கத்திற்குப் பெரிதும் பயன்படும். சங்கத்தின் ஆரம்பகால சுற்றறிக்கைகள், இரண்டு பக்கசெய்தி மடல், போன்றவைகள் இருப்பின் அவற்றையும் தங்கள் செய்திகளோடு அனுப்பி வரலாற்று நூல் நல்ல முறையில் வெளிவந்திட உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். தங்கள் செய்திகளையும், விவரங்களையும்

முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்
41, காவேரி சாலை, கலாசேத்திரா காலனி, பெசன்ட் நகர்,
சென்னை – 600 090

என்ற விலாசத்திற்கு ஜீலை 20ந் தேதிக்குள் அனுப்புமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ஆர்.செல்வராஜ்
செயலாளர்

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

## வேண்டுகோள்

1961 ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கப்பட்ட சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 50 ஆண்டுகளைக் கடந்துள்ளதை முன்னிட்டு 02–09–2012 அன்று சென்னை காமராஜர் அரங்கத்தில் நடக்க இருக்கும் இந்த ஆண்டின் குடும்பவிழா சங்கத்தின் பொன்விழாவாக மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. விழாவிற்கு வரும் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் ஓர் அழகிய பெரிய பை, பொன்விழா மலர், சங்க வரலாற்று நூல் ஆகியன தருவதற்கு ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விழாவில் கலந்து கொள்ளும் கொங்கு சொந்தங்கள் அனைவருக்கும் பொருட்கள், இனிப்புகள், காரங்கள், செடி கொடிகள், வீட்டு உபயோகப் பொருட்கள், குழந்தைகளுக்குப் பயன்படும் பொருட்கள் போன்றவைகளை பொன்விழாவை முன்னிட்டு வழங்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அன்பளிப்புகள் கொடுக்க விருப்பமுள்ள கொங்கு சொந்தங்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

ஆர்.செல்வராஜ்
செயலாளர்

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖


## வாழ்த்துகிறோம்



சென்னையில் உள்ள Unitech Plasto Components Pvt. Ltd., குழுமத்தின் உரிமையாளரும், நமது சங்கத்தின் உறுப்பினருமான பொறியாளர் திரு. K.ஜெகதீசன் – திருமதி M.சுமதி ஆகியோரின் புதல்வி J.ஹேமப்பிரியா 2012 ஆம் ஆண்டின் 12ஆம் வகுப்பு CBSE பொதுத்தேர்வில் 500 க்கு 488 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் மூன்றாம் இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளார். இவர் கோபாலபுரத்தில் உள்ள DAV Girls Sr.Sec. School ல் பயின்றவர். இவர் திருச்சியில் உள்ள NIT கல்லூரியில் (ECE) படிப்புக்குத் தேர்வு பெற்றுள்ளார். தனது உழைப்பால் சாதனை புரிந்துள்ள செல்வி J.ஹேமப்பிரியா மேலும் பல வெற்றிகள் பெற சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்திப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

## நூல் வெளியீட்டு விழா



கோவை ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 15–06–2012 அன்று நடைபெற்ற விழாவில் சிந்தனைக் கவிஞர் டாக்டர் கவிதாசன் அவர்கள் எழுதியுள்ள ‘Emotional Intelligence among Executives என்ற அவரது ஆய்வுக் கட்டுரையின் தொகுப்பு நூல் அறிமுக வெளியீட்டு விழா நடைபெற்றது. தொகுப்பு நூலினை கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் திருமதி மலர்விழி அறிமுகப்படுத்திப் பேசினார். கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் வாழ்த்துரை வழங்கினர். நூலாசிரியர் டாக்டர். கவிதாசன் அவர்களுக்கு நமது சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

## சங்க உறுப்பினரின் ஆலோசனை கடிதம்

உயர்திரு. செய்திமடல் ஆசிரியர் அவர்களுக்கு பணிவான வணக்கத்துடன் சி.வ.சண்முகம் எழுதுகிறேன். நான் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் என்பதனைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டின் 45% பேர் உடல் ஆரோக்கியமில்லாமல் வாழ்ந்து வருகின்றனர். இன்றைய அவசர காலத்தில் பாஸ்ட் புட் சாப்பிட்டு உடம்பைப் கெடுத்துக்கொள்கிறார்கள். கிராமத்தில் பாரம்பரியம் மிக்க உணவுகளைக் காண்பதும் சாப்பிடுவதும் அரிதாகிவிட்டது. நமது பாரம்பரியம் பற்றிச் சொல்லிக்கொடுப்பதற்குக் கூட இன்று ஆட்கள் கிடையாது. ஓரளவிற்கு விபரம் தெரிந்தவர்கள் வீட்டில் காய்கறித் தோட்டம் அமைத்து, தங்களுக்குத் தேவையான காய்கறிகளை இயற்கையாக விளைவித்துக்கொள்கின்றனர்.

சென்னையில் உள்ள நமது சொந்தங்கள் வீட்டுக் காய்கறித் தோட்டம்அமைக்க ஆர்வம் மிக அதிகமாகக் கொண்டு இருந்தாலும், முறைப்படி சொல்லிக் கொடுக்கவோ உதவவோ சென்னையில் நம்பிக்கையான ஆட்கள் இல்லை. அப்படியே சொல்லிக் கொடுத்தாலும் அவை வியாபார நோக்கமாகவே உள்ளது. இக்குறையை போக்கவும் நமது சொந்தங்கள் பயன்பெறவும் நம்பிக்கையான நபரைத் தேர்வு செய்து அனுபவம் வாய்ந்தவீட்டு காய்கறித் தோட்டம் அமைத்துக் கொடுக்கவும் தகுதியான ஒருவரைக் ஆலோசனை வழங்கவும் கேட்டுக்கொண்டோம்.

மிக குறைந்த கட்டணத்தில் அவரும் செய்து தருவதாக ஒப்புக்கொண்டார். அவரின் பெயர் மற்றும் முகவரியை கீழே கொடுத்துள்ளேன்.

விலாசம் :
திருமதி. லஷ்மி ஸ்ரீராம் அவர்கள்
51/4, திருவேங்கடம் வீதி முதல் தளம், R.A.புரம்,
சென்னை – 600 028. செல் : 94444 12111

இப்படிக்கு
சி.வ.சண்முகம்
வெள்ளகோவில்
செல் : 9788903699

❖❖❖❖❖

# நிலம் கையகப்படுத்துதல்

முனைவர் களிமேடு கா.இலட்சுமணன், கோவை

பண்டைக்காலத்தில் மக்கள் நாடோடிகளாக கால் நடைகளுடன் இடம் பெயர்ந்து ஆங்காங்கே தங்கி வந்தனர். (ஒரு துண்டு செய்தி : ஆடுகள் மண்ணில் நீர்வளமுள்ள இடங்களில் ஒதுங்கின. அத்தத்துவத்தை அன்று (Water Diviner) நிலத்தடி நீர் கண்டறியப் பயன்படுத்தினர்)

அரசு, நிலங்களைப் பகிர்ந்தளித்து நில உரிமையும் (பட்டா) வழங்கியது. ஆங்கிலேய அரசு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை **1894**ல் அறிமுகப்படுத்தியது. எந்தவொரு நிலத்தையும் Land Acquisition Act 1894 மூலமாக பொது நன்மைக்காக அரசு எடுத்துக்கொள்ளமுடியும். இவ்வாறு கையகப்படுத்தும் நிலங்களுக்கு மாற்று நிலம், வேலை வாய்ப்பு, சமூகவசதிகள் மற்றும் நிதியுதவி வழங்கிட உத்திரவாதமில்லை. இழப்பீடு அளித்தாலும் நியாயமானதாக இருக்காது.

மக்களுக்கு சொத்துக்களின் மீது உரிமை என்பது இந்திய அரசியல் சட்டம் பிரிவு **31** மற்றும் **19 (1)** ன் கீழ் அளிக்கப்பட்டாலும், பொது நலனுக்காக நிலங்களை எடுத்துக்கொள்ளும் உரிமை (Eminent Domain) அரசிடமேயுள்ளது. பொது நலனுக்காகத்தானேயென்று மக்களும் மனமுவந்து நிலங்களை அளித்தனர்.

பொது நோக்கு என்பதின் பொருளென்ன **?**

சாலைகள் அமைத்தல், மருத்துவ மனைகள், கல்வி நிலையங்கள், இரயில் போக்குவரத்து மற்றும் மக்களுக்குப் பயன்படும் திட்டங்களுக்காக நிலமெடுப்பதேயாகும்.

சுதந்திரமடைந்த பின் பொது நோக்கில் பல உள்நோக்குகள் தோன்றின. பல்கலைக்கழகத்திற்கு ஏக்கர் ரூ. **5000** ல் படிக்காத ஏழை விவசாயிகள் நிலமளித்தால் அவர்கள் பகுதியில் அறிவுக்கோவில் வரட்டுமேயென்றுதானே **?** அம்மக்களின் வாழ்வு மலர என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன **?** விளை நிலத்தின் நடுவே பெட்ரோலிய குழாய்கள் போடுவதால் ஏற்படும் பிரச்சனைகளை விவசாயிகளுடன் விவாதித்து அவர்தம் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டுமல்லவா **?**

அதன்பின் தொழில் நிறுவனங்களுக்குத் தேவைக்கு அதிகமாக வேளாண் நிலங்களைப் பெற்றுத் தருவதில் அரசு மும்முரமாக ஈடுபட்டது. இந்திய பொருளாதாரமென்றால் தொழில் நிறுவனங்கள் சார்ந்ததாகவே மாற்றப்பட்டுவிட்டது. எவ்வளவுதான் தொழில் நிறுவனங்கள் முன்னேறினாலும் வேளாண்மையில் முன்னேற்றம் இல்லாவிட்டால் நாடு முன்னேறாதென்று பண்டிட் நேரு கூறிச்சென்றார். அவருக்காக நவம்பர் **15** விழாவும், விவசாயிகளுக்கு ஆம் ஆத்மியும் அளித்து அரசு திருப்திப்படுகிறது.

பல பெரிய தொழில் நிறுவனங்களைத் தோற்றுவித்த தேசீயப் பற்றுள்ள டாடா நிறுனம் சிங்கூரில் நிலங்களைக் கையகப்படுத்தினாலும் மக்களுக்கு நன்மையே செய்யுமென நம்புவோமாக! மராட்டிய நிலத்திலிருந்து ரிலையன்ஸ், தில்லி புறநகர்ப்பகுதியின் எதிர்ப்பால் மாவட்ட ஆணையர் அலுவலகமே பூட்டப்படும் நிலை, ஒடிஸாவின் போஸ்கோ நிறுவனம், கோவாவில் ஒட்டுமொத்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தையே (Special Economic Zone - SEZ) நிறுத்திவைத்திடும் நிலை, தூத்துக்குடியில் டைட்டானிய சுரங்கம், ஏன், மக்கள் தொகை அதிகரிப்பால் தடுமாறும் சென்னைக்குப் புதிய துணை நகரம் அமைப்பதில்தான் எத்தனை இடர்பாடுகள்?

மக்கள் கருத்துக்கு செவி சாய்த்து 1984 ம் சட்டத்தை மாற்றியமைத்திடவேண்டும்.

**கையகப்படுத்தலின் வகைபாடு :**

சுதந்திர இந்தியாவில்தான் நிலம்
கையகப்படுத்தலுக்கு எத்தனை முகங்கள் !

எல்லோருக்கும் வீடு அளிக்க 65 ஆண்டு சுதந்திரத்திற்குப் பின்னும் இயலவில்லை. அரசு நிலங்களில் மக்களே குடிசைபோட ஆரம்பித்தனர். இந்த (Encroachment) ஐ அரசு கவனிக்காததால் கடைகள், கோவில்கள் போன்றவைகளும் அரசு நிலங்களில் பரிமளிக்க ஆரம்பித்தன. ஏதோ ஒரு மாவட்ட ஆட்சியர் அதை ஒழுங்கு செய்ய முயற்சிப்பார்.

அடுத்து வருவது பண்பற்றமுறையில் நிலங்களை பலாத்காரமாக பலவீனர்களிடமிருந்து பிடுங்கிக்கொள்ளுதல் (Land Grabbing). உலகிலேயே இந்தியா 10 நாடுகளில் ஒன்றாக தலைசிறந்து விளங்குகிறது. World Watch நிறுவனம் இந்தியர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நில அபகரிப்பில் பெயர் பெற்றவர்கள் என வர்ணிக்கிறது. இந்த நிலப்பரப்பு 1.4% வேளாண் நிலமாகும்.

ஆக்கிரமித்தல் (Agression ./ Illegal Possession) என்பது சட்டவிரோதமாக ஒருவர் இடத்தை, நாட்டைக் கவர்ந்துகொள்ளுதல்.

**இனி நாம் நிலம் கையகப்படுத்தலின் வகைபாடு காண்போம் :–**

1. இயற்கையின் சீற்றம், கடல் கொந்தளிப்பு, சுனாமி, நிலச்சரிவு, கடல் அரிப்பு, நதிகள் வழி மாறுதல்–பெரிதும் பாதிக்கப்பட்டது அஸ்ஸாம், சரசுவதி நதி. எத்தனை வீடுகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டன !

2. வளர்ச்சித்திட்டங்கள்–மேலே கூறியது போல அணைகட்டுதல், சாலைகள் அமைத்தல், நீர் மின் தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்காக நிலங்களைத் கையகப்படுத்துதல்.

3. குடிசைமாற்று வீடு கட்டும் திட்டங்கள், விவசாய நிலங்களை அழியவிட

மாட்டோமென்று அரசின் ஒரு துறை அலற, மற்றொன்று விவசாயிகளை துரத்திவிட்டு மூழ்கும் வீடுகள், 10 ஆண்டுகளில் இடிந்து விடும் வீடுகள் கட்ட.

4. பாதுகாக்கப்பட்ட பகுதிகள்–வனப்பகுதிகளில் வனவிலங்கு சரணாலயம், சுற்றுச்சூழல் பாதுகாப்பெனக்கூறி வனப்பகுதியில் வாழும் மக்களை சட்ட ரீதியாக வெளியேற்றி நிலங்களைக் கையகப்படுத்துதல். மலைவாழ்மக்களை விட வனங்களை யாரால் சிறப்பாகப் பாதுகாக்கமுடியும் ? இந்தியாவின் இரண்டாம் பெரிய தொழில் நகரமான கோயமுத்தூர், கோனன் என்ற இருளத்தலைவன் ஆண்ட ஊர். சிறந்த கோவிலாம் கோனியம்மன் அவர்கள் குல தெய்வம். எங்கே அந்த இருளர்கள் ? எங்கே அமெரிக்க குடிவாழ் இந்தியர்கள் ?

**அரசு நிலம் கையகப்படுத்தலின் நல்ல இலக்கணம் :–**

பொது நலனுக்காக நிலமளித்த ஆறு கோடி மக்களுக்கு குடியரசு இந்தியா போதிய இழப்பீடு வழங்கவேண்டும். அணை கட்டினால் நிலமளித்தோர் மட்டுமன்றி பாதிக்கப்படும் மற்றோருக்கும் உதவியளிக்க வேண்டும். நீர்மின், காற்றாலைத் திட்டங்கள் உரிய இடத்தில்தான் அமைத்திடல் வேண்டும்.

தொழில் நிறுவனங்களுக்கு நிலமளித்தால் தண்ணீர், மின்சாரம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு தொழில் நிறுவனங்கள் உத்தரவாதமளிக்கவேண்டும். நிலத்திற்கான தொகையல்லாது குடிபெயரும் பொழுது நிலம், அடிப்படை வசதிகள் முதலானவைகளை நிறுவனங்களே அளித்திடவேண்டும். SEZ ல் ஒரு தொழிலுக்காக பெரிய பரப்பளவைக் கையகப்படுத்தி, பின்னர் பிரிதொரு துணை நிறுவனங்களைத் தோற்றுவித்தால் அந்நாளில் நிலமதிப்பீட்டிற்கு ஏற்ப பணமாவோ, பங்குகளாகவோ அளித்திட வேண்டும்.

ஒரு விவசாயி பல்லாண்டுகளாக செழிப்பூட்டி வளர்த்த நிலத்தைக் கொடுத்துவிட்டு வேறொரு இடத்தில் வீடு, விவசாயம், அடிப்படை வசதிகளுக்குப் படும்பாடுகளை தொழில் நிறுவனமும் அரசும் உணர்ந்து அவர்களைப் பாதுகாத்திடல் வேண்டும்.

நிலம் கையகப்படுத்தலில் மற்ற நாடுகள் மக்களை எவ்வாறு பாதுகாக்கின்றன என்பதைக்கண்டு சிந்திக்க வேண்டும். இந்திய விவசாயிகளுக்கு நன்றித்தொகை அளித்திடும் பண்பு மக்கள் அரசுக்கு வேண்டும்.

குறிப்பு : ஆசிரியர் 1968 ஆம் ஆண்டு முதல் 1975 ஆம் ஆண்டு வரை சங்கத்தின் செயலாளராய்ப் பணியாற்றியவர்.
செல் : 9443988813

❖❖❖❖❖

# இல்வாழ்க்கையின் இன்பம்

1. திருமண விழா என்பது இரு மனங்கள் இணையும் விழா இனிய, சிறந்த புதிய குடும்ப வாழ்வை உருவாக்கும் சீரிய பணியின் ஆரம்ப விழாவும் அதுவே.

2. ஓர் ஆணின் வாழ்வு ஒரு பெண்ணின் வருகையாலும், ஒரு பெண்ணின் வாழ்வு. ஓர் ஆணின் வருகையாலும் இனிமை காண வேண்டுமே தவிர இன்னல் காணக்கூடாது.

3. பெண்ணுக்கழகு இன்முகம், கனிவு, கருணை, சாந்தம், பெருந்தன்மை, பொறுமை.

4. மனைவி கணவனுக்கு நண்பனாய், மந்திரியாய் அவனது திறமைகளை எல்லாம் வெளியேகொண்டு வரும் ஆசானாய், துன்பங்களைத் துடைக்க உதவும் உற்சாகத் தென்றலாய், அவன் விருப்பங்களை விரைந்து நிறைவேற்றும் உதவியாளனாய், எப்போதும் இன்முகம் காட்டி இனிய சொல் மொழிந்து இன்பம் அளிப்பவளாய் விளங்கிட வேண்டும்.

5. கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் மனதார விரும்ப வேண்டும். முழுமையாய் நம்ப வேண்டும்.

6. அறிவு இணைந்தால் வளமை கூடும். கரங்கள் இணைந்தால் வலிமை கூடும். இதயங்கள் இணைந்தால் இனிமை கூடும். குடும்பத்தில் அத்தனையும் இருக்க வேண்டும்.

7. கணவன், மனைவி இருவரின் ரசனையும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று அவசியம் இல்லை. ஒருவர் ரசனையில் ஒருவர் குறுக்கிடாமல் இருக்கும் பெருந்தன்மையே போதும்.

8. இந்த உலகில் பெற்ற தாய், தந்தைக்கு அடுத்தபடி ஆறுதல் தருகின்ற, அக்கறைப்படுகின்ற, காத்து ரட்சிக்கின்ற உறவு கணவனுக்கு மனைவியும் மனைவிக்கு கணவனும்தான். அது நாளுக்கு நாள் தழைக்க வேண்டுமே தவிர தளரக்கூடாது.

9. வெளியே கிடைக்கும் அவமானம், ஏமாற்றம், தோல்வி, மனப்புழுக்கம் இவற்றை ஈடு செய்யும் புத்துணர்ச்சியையும், தெம்பையும் வற்றாது வழங்கும் ஊற்றாக வீடு விளங்க வேண்டும்.

10. கணவனுக்கும் மனைவிக்கும் கருத்து வேறுபாடுகள் வரலாம்; தவறில்லை. தவிர்க்கவும் முடியாது. ஆனால் அது மூன்றாம் பேருக்குத் தெரியக்கூடாது. தவிர அது பெரிதாக வளராமல், நாட்கணக்கில் தொடராமல் உடனுக்குடன் நீங்கிவிட வேண்டும்.

11. ஒரு கை தட்டினால்தான் சத்தம். ஒருவர் கோபமாகக் கத்தினால் மற்றவர் அமைதியாக இருப்பதே உத்தமம்.

12. மனைவியின் உறவினருக்கு கணவனும், கணவனின் உறவினருக்கு மனைவியும் குறைந்தபட்ச மரியாதையாவது காட்ட வேண்டும். கண்டிப்பாய் அவமரியாதை கூடாது.

13. தனக்காய் வாழ்வது சுயநலம். தன் துணைக்காக வாழ்வது தாம்பத்யம். தங்கள் குழந்தைகளுக்காகவும் தங்களைச் சார்ந்த உறவினருக்காகவும் வாழ்வது குடும்பம்.

14. குடும்ப நிலை உயர உயர, தங்களைச் சார்ந்து நிற்கும் வறிய உறவினரையும் கை தூக்கி விடுதல் மிகப்பெரிய தருமம். தர்மம் தலை காக்கும். தங்களுக்குப்பின்வரும் தலைமுறையையும் காக்கும்.

15. மனைவிக்காகவும், குழந்தைகளுக்காகவும் தினமும் சில மணி நேரங்களைச் செலவிடாத மனிதன், வாழ்வில் பெரும் இன்பத்தை இழந்து விடுகிறான். அதுமட்டுமல்ல, தன் கடமையிலிருந்தும் தவறி விடுகிறான்.

16. நம்மைவிட சிறந்த சந்ததியை உருவாக்குவது இல்லறத்தின் மிக முக்கிய நோக்கம். இதை உணர்ந்தவர்களின் குடும்பங்கள்தான் உயர்கின்றன.

17. வெள்ளத்தால் அழிந்த மக்களை விட, செல்லத்தால் அழிந்த மக்களே (பிள்ளைகளே) அதிகம். கண்டிப்பும் காட்டுங்கள்.

18. பிள்ளைகளுக்கு சொத்து சுகங்களைச் சேர்த்து வைப்பதைவிட, சுகத்தில் ஊறவைப்பதைவிட, அவர்களை நல்லாரை நாடும் ஒழுக்கமுள்ளவர்களாகவும், எதையும் செய்து முடிக்கும் வல்லவர்களாகவும் வளர்த்து விடுதல் அல்லவா சிறப்பு !

❖❖❖❖❖





# கொங்கு நண்பர்கள் சங்கம்

அலுவலகம் :
“வெள்ளி விழா இல்லம்”
34, சீனிவாசப்பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.
Ph : 28351244, 28352744
Cell : 93815 45452

“தீரன் சின்னமலை மாளிகை”
72, பீட்டர்ஸ் ரோடு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 2835 1744
Cell : 93815 45451

## 50ம் ஆண்டு நிறைவு பொன் விழா மலர் – 2012

## விளம்பர வேண்டுகோள்

அன்புடையீர்,

நமது சங்கம் சென்னையில் கடந்த 50 ஆண்டுகளாகப் பல்வேறு சமுதாயப்பணிகளை ஆற்றிவருவதையும், குறிப்பாக கொங்கு நாடு இல்லம், வெள்ளி விழா இல்லம் ஆகிய இரு கட்டடங்களையும் கட்டி சென்னை வரும் நம் மக்கள் தங்கிச்செல்லவும், தங்கள் மேற்படிப்பு, பயிற்சிகளுக்காகச் சென்னை வரும் மாணவ மாணவிகள் தங்கி இருக்கவும் அர்ப்பணித்திருக்கிறோம் என்பதை அறிவீர்கள். மூன்றாவதாக, சென்னை பீட்டர்ஸ் சாலையில் புதியதாக கட்டிமுடிக்கப்பட்டுள்ள தீரன் சின்னமலை மாளிகையில் சென்னை வரும் நமது கொங்கு சொந்தங்கள் நவீன வசதிகளுடன் தங்கிச்செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் நமது கொங்கு சொந்தங்கள் பெருமளவில் தங்கி பயனடைந்து வருகிறார்கள். மேலும் அதிக மதிப்பெண்கள் பெற்று வசதி குறைவாக உள்ள மாணவ, மாணவிகளுக்கு ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறோம் என்பதும் நீங்கள் அறிந்ததே!

மேலும் நிரந்தர அறக்கட்டளைகளை அமைத்து, நமது சமுதாயத்தில் உன்னதமான பணிகளை ஆற்றி வருபவர்களுக்குக் ‘கொங்குமாமணி’ விருது, பல்வேறு துறைகளில்

சாதனை புரிந்தவர்களுக்கு 'கொங்கு சாதனையாளர்' விருது, இளைஞர்களுக்கு 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது மற்றும் 'கொங்கு வேளாண் சாதனையாளர் விருது' ஆகிய விருதுகளை ஆண்டு தோறும் வழங்கி வருகிறோம்.

இந்த ஆண்டு குடும்ப விழா **50**வது ஆண்டு நிறைவு பொன் விழா என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இந்தப் பொன் விழாவை மிகவும் சீரும் சிறப்புமாக நடத்த உங்களது ஒத்துழைப்பு தேவை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறோம்.

**2012** ம் ஆண்டு விருதுகளுக்காக தேர்வு செய்யப்படவுள்ள கொங்கு மாமணிகள் மற்றும் சாதனையாளர்கள் ஆற்றிய அரும்பணிகளைத் தொகுத்து 02-09-2012 அன்று நடக்கவிருக்கும் பொன் விழாவில் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட இருக்கிறோம். இந்தப் பொன் விழா மலரில் நமது சமுதாயத்தினர் பலரும் நடத்தி வரும் தொழில், வியாபாரம் மற்றும் கல்வி நிறுவனங்களைப் பற்றிய விவரங்களை அனைவரும் அறியும் பொருட்டு வெளியிட விழைகிறோம்.

தாங்கள் இப்பெரும் முயற்சிக்கு உதவும் வகையில் இத்துடன் இணைத்துள்ள விளம்பர வேண்டுகோளைப் பூர்த்தி செய்து, தங்கள் நிறுவனத்தின் விளம்பரத்தையும், அத்துடன் கொங்கு நண்பர்கள் சங்கம் (Kongu Nanbargal Sangam) என்ற பெயருக்கு எடுத்த காசோலையையும், **10–08–2012** தேதிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மலர்க்குழுத் தலைவர் :
**பி.சென்னியப்பன்**
மலர்க்குழு துணைத் தலைவர் :
**கே.கே.ரமேஷ்**
மலர்க்குழு உறுப்பினர்கள் :
**கே.ஆர்.பி.சண்முகம்**
**வி.பி.வீரப்பன்**
**ஆர்.சண்முகவேல்**
**எஸ்.சிவசாமி**
**ஆர்.இளங்கோ**
**பி.இரவி**

இப்படிக்கு
**பரணி கே.பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர்.செல்வராஜ்**
செயலாளர்

* 80G Exemption available

# 50ம் ஆண்டு நிறைவு பொன் விழா மலர் – 2012

பெறுநர்

**பொன் விழா மலர்க்குழு**

**கொங்கு நண்பர்கள் சங்கம்,**
"வெள்ளி விழா இல்லம்"
**34**, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Ph : 28351244, 28352744

Cell : 93815 45452

வணக்கம்.

✔ குறிப்பிட்டுள்ள விளம்பர விவரத்தை 2012ஆம் ஆண்டு பொன் விழா மலரில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். விளம்பர விபரத்தை இத்துடன் இணைத்துள்ளோம்.

| | | | |
|---|---|---|---|
| பின்பக்கம் | (வண்ணத்தில்) | ரூ.1,00,000 | ☐ |
| முன் அட்டை (உள்பகுதி) | (வண்ணத்தில்) | ரூ.50,000 | ☐ |
| பின் அட்டை (உள்பகுதி) | (வண்ணத்தில்) | ரூ.50,000 | ☐ |
| முழுபக்கம் ஆர்ட் பேப்பர் | (வண்ணத்தில்) | ரூ.25,000 | ☐ |
| முழு பக்கம் | (கருப்பு வெள்ளை) | ரூ.10,000 | ☐ |
| அரை பக்கம் | (கருப்பு வெள்ளை) | ரூ.5,000 | ☐ |

விளம்பரத்திற்குண்டான தொகை ரூ........................................ ஆன காசோலை / வரைவோலை எண்............................ தேதி......................... வங்கியில் எடுத்து இத்துடன் இணைத்துள்ளோம்.

அனுப்புநர்

......................................................

......................................................

......................................................

கையொப்பம்


# என்றும் நலமுடன் வாழ

## தற்காலிக மறதி

பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ்.நடராஜன், முதியோர் மருத்துவர்

சிலர் நல்ல மனநிலையில் இருப்பார்கள். திடீரென்று அவர்கள் தம்மை அறியாமலேயே மறதியினால் பாதிக்கப்படுவார்கள். சிறிது நேரம் கழித்து, மறதியிலிருந்து மீண்டு தம் சுய நினைவுக்கு வந்து விடுவார்கள். இதைத்தான் 'தற்காலிக மறதி' என்று கூறுவார்கள்.

**காரணங்கள்**



. திடீரென்று மூளைக்கு இரத்த ஓட்டம் குறைதல் (transient ischaemic attack). உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு மூளையில் செல்லும் இரத்தம் ஓட்டம் சிறிது நேரம் தடைப்பட்டால் ஒரு பக்கம் கண் பார்வை குறைவு, ஒரு பக்கம் கை, கால் செயலிழத்தல் பேச்சு குளறுதல் மற்றும் மறதியும் சேர்ந்து ஏற்படலாம். இவர்களுக்கு 24 மணி நேரத்திற்குள் தகுந்த சிகிச்சை அளித்தபின் பழைய நிலைக்கே திரும்பி விடுவார்கள்.

. இரத்தத்தில் திடீரென்று சர்க்கரையின் அளவு மிகவும் குறைதல் (Hypoglycemia). காரணங்கள்: நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு உடலில் சர்க்கரையின் அளவு திடீரென்று குறைந்தால் (சுமார் 60 மி.கி) நோயாளிக்கு மயக்கம் ஏற்படும்; மிகவும் வேர்த்துக்கொட்டும்; பசி அதிகம் எடுக்கும்; தன்னை மறந்த நிலையில் இருப்பார். உடனே அவருக்கு சர்க்கரை கலந்த நீர் அல்லது பழச்சாறை கொடுத்தாலோ அல்லது குளுக்கோஸ் மருந்தை ஊசியின் மூலம் செலுத்தினாலோ பழைய நிலைக்கு வந்துவிடுவார்கள்.

. உடலில் திடீரென்று உப்பின் அளவு குறைதல் (Hyponatraemia), முதுமைப் பருவத்தில் ஒரு சில காரணங்களால் உடலிலுள்ள உப்பு சத்து குறையும் போது (136mEq/L) திடீரென்று மயக்கம், மறதி மற்றும் வலிப்பு போன்ற தொல்லைகள் ஏற்படலாம். அவர்களுக்கு உப்பு அதிகம் கலந்த திரவ உணவை ஊசி மூலம் செலுத்தினால் நல்ல குணம் அடைந்து பழைய நிலைக்கு திரும்பி விடுவார்கள். உடலில் உப்பு சத்து குறைவதற்கான காரணங்கள். நீர் மாத்திரை, மனநோய்க்கு கொடுக்கும் மாத்திரை, வலிப்பு நோய் மாத்திரை, அதிகப்படியான நீரை குறுகிய காலத்தில் எடுத்துக்கொள்வது, இருதய நோய், தைராய்டு மற்றும் சிறுநீரகம் செயலிழத்தல்.

. விபத்தில் ஏற்படும் தலைக்காயத்தினாலும் தற்காலிக ஞாபக மறதி ஏற்படலாம். தலை காயம் ஏற்பட்டவர்கள் சாதாரணமாக 24 மணி நேரத்திற்குள் ஞாபக சக்தியை மீண்டும் பெற்று விடுவார்கள். அவர்கள் தொடர்ந்து பல நாட்களுக்கு மேல் மறதியுடன் இருந்தால், அவர்களுக்கு ஞாபக சக்தி மீண்டும் பழைய நிலைக்கு வருவது சற்று சிரமமே.

. மதுவை அதிகமாக அருந்தும் சமயத்தில்

. மாத்திரைகளின் பக்க விளைவுகள் உதாரணம், தூக்க மாத்திரை, மனநோய்களுக்குக் கொடுக்கும் மாத்திரை

. திடீரென்று உடலில் வைட்டமின் பி 1 (தையமின்) குறைந்தால் ஞாபக மறதி வர வாய்ப்புண்டு, மதுவை திடீரென்று நிறுத்தும் பொழுது மற்றும் அதிகமாக வாந்தி ஏற்படும் பொழுது இச்சூழ்நிலை உருவாகலாம். இவர்களுக்கு வைட்டமின் பி1 மருந்தை ஊசி மூலம் செலுத்தினால் ஞாபக சக்தி மீண்டும் வர வாய்ப்புண்டு.

. இளம் வயதில், முக்கியமாக பெண்களுக்கு ஸ்டிரியா (Hysteria) என்னும் தொல்லையினாலும்

தற்காலிக மறதி ஏற்படலாம். இவர்கள் மற்றவர்கள் முன்னிலையில் (அவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக) திடீரென்று மயங்கி விழுவார்கள். வலிப்பு நோய் வந்தவர்களைப் போல் கை, கால்களை உதறி விட்டு விட்டு இழுத்துக்கொள்வார்கள். சிறிது நேரத்தில் பூரண குணம் அடைந்து தனக்கு என்ன நடந்தது என்று (ஒன்றும் தெரியாதது போல்) மற்றவர்களிடம் ஆவலுடன் கேட்பார்கள். இவர்கள் எத்தனை முறை கீழே விழுந்தாலும் அவர்கள் உடலில் ஒரு சிறு காயம் கூட ஏற்படாமல் இருப்பதே இந்நோயின் தனிச் சிறப்பு.

மேற்கண்ட தொல்லையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதன் அடிப்படை காரணங்களைக் கண்டறிந்து தக்க சிகிச்சையளித்தால் மறதி பறந்தோடி விடும். (... தொடரும்)

**கேள்வி–பதில்**

திரு.குப்புசாமி, நாமக்கல்

**கேள்வி** : டாக்டர் ஐயா அவர்களுக்கு வணக்கம்.

காய்ச்சல், குளிர், உடல்வலி, பேதி, மூட்டுவலி என்று ஏதாவது தொல்லைகளுக்கு டாக்டரிடம் சென்றால் முதலில் அவர் எழுவது ஒரு ஆன்டிபயாட்டிக் (Antibiotic) தான். ஒரு சில டாக்டர்கள் அதை மூன்று நாட்கள் தொடர்ந்து சாப்பிட வேண்டும் என்கிறார்கள். சிலர் பத்து நாட்கள் மற்றும் ஒரு மாதம் என்று கூட சொல்கிறார்கள். ஆனால் பல நோயாளிகள் டாக்டர்கள் சொன்ன காலம் வரை சாப்பிடுவது இல்லை. என்னுடைய சந்தேகம் எல்லாம் ஆன்டிபயாட்டிக்கை எதற்காகச் சாப்பிட வேண்டும் ? எவ்வளவு நாள் சாப்பிட வேண்டும் ? தொடர்ந்து சாப்பிடுவதால் கெடுதல் ஏதும் உண்டா ? உங்களின் விளக்கத்தை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

**பதில்** : ஆன்டிபயாட்டிக் (Antibiotic) என்பது கிருமி நாசினி. உடலில் உள்ள கிருமிகளால் ஏற்படும் தொல்லைகளே பலவித நோய்களுக்குக் காரணம் ஆகும். இக்கிருமிகளை அழிக்க ஆன்டிபயாட்டிக் என்னும் கிருமி நாசினியை டாக்டர்கள் கொடுகிறார்கள். ஒவ்வொரு வகையான கிருமிகளைக் கொல்ல தனி வகையான ஆன்டிபயாட்டிக் உண்டு. கிருமிகள் அனைத்தையும் கொல்லும் சக்திபடைத்த ஆன்டிபயாடிக் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆன்டிபயாட்டிக்கின் அளவு, ஒருவரின் வயது, எடை மற்றும் சிறுநீரகத்தின் செயல் திறனைப் பொறுத்துக் கொடுக்கப்படும். நோய்களுக்குத் தகுந்தவாறு ஆன்டிபயாட்டிக் எடுத்துக்கொள்ளும் காலமும் வேறுபடும். உதாரணத்திற்கு, தொண்டை வலிக்கு மூன்று நாட்கள், இருமல் சளிக்கு 5/7 நாட்கள், காசநோய்க்கு ஒரு வருடம்.

ஆன்டிபயாட்டிக் நோய்க்கிருமிகளைக் கொன்று, நோயைக் குணப்படுத்த வந்த அற்புதம் என்ற போதிலும், அவற்றுள் சில, சிறுநீரகம், காது, கல்லீரல் ஆகியவற்றிற்குப் பாதிப்பு அளிக்கக் கூடியவை. ஆன்டிபயாட்டிக் மனிதனுக்கு ஏற்படுத்தும் பாதிப்பு ஒருபுறம் இருக்க, மனிதனே மனிதனுக்கு Antibiotic Resistance என்ற பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறான். அதாவது ஒவ்வொரு நோய்க் கிருமிக்கும் குறிப்பிட்ட அளவு ஆன்டிபயாட்டிக் மருந்தைக் குறிப்பிட்ட நாட்களுக்கு மருத்துவரின் பரிந்துரைப்படி உட்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாது, நாமே நமக்குத் தெரிந்த ஏதோ ஒன்று அல்லது இரண்டு ஆன்டிபயாட்டிக் மருந்தை மருந்துக்கடையில் வாங்கி இரண்டு அல்லது மூன்று நாட்கள் உண்டு சுய மருத்துவம் செய்யும்போது, அந்த ஆன்டிபயாட்டிக் மருந்தைத் தாக்குப்பிடிக்கும் வலிமையை (Resistance) நோய்க்கிருமி அடைந்துவிடுகிறது.

இந்நிலை தொடருமானால் உலகில் எந்த ஆன்டிபயாட்டிக் மருந்தினாலும் நோய்க்கிருமிகளைக் கொல்ல இயலாத நிலை ஏற்பட்டு, நோய்கள் தலைதூக்க ஆரம்பித்துவிடும். இந்த Antibiotic Resistance எனும் பிரச்சனையைத் தவிர்க்கவும், ஆன்டிபயாட்டிக்கின் பல்வேறு (Side effects) பக்கவிளைவுகளுக்கு ஆளாகாமல் இருக்கவும் மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்து எடுத்துக் கொள்வதே சாலச் சிறந்தது.

உதவி : செல்வி திவ்யா, சென்னை மருத்துவக் கல்லூரி மாணவி.

❖❖❖❖❖

# நூல் மதிப்புரை

**நூல்** : **கொங்கு வேளாளர் குல வரலாறு**

ஆசிரியர் : புலவர் செ.இராசு, ஏம்.ஏ., பி.எச்.டி.,

வெளியீடு : கொங்கு ஆய்வு மையம்
58/2, பாலக்காட்டுத் தோட்டம், புதிய ஆசிரியர் குடியிருப்புப் பாதை,
ஈரோடு – 638001. போன் : 0424–2262664

பக்கம் : 656 (பாகம் 1–336, பாகம் 2–320) விலை : ரூ. 350

தென்முகம் வெள்ளோடு கிராமம் உலகபுரம் கரை வெள்ளமுத்துக்கவுண்டன் வலசில் சாத்தந்தை குலத்தில் பிறந்த புலவர் செ.இராசு அவர்கள் ஈரோட்டில் தமிழாசிரியராகவும், தொல்லியல் துறை ஆய்வாளராகவும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் கல்வெட்டு–தொல்லியல் துறை முன்னாள் தலைவராகவும் மிகச்சிறப்பாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவராவார்.

ஈரோட்டில் கொங்கு ஆய்வு மையம் அமைத்து கொங்கு வேளாளர் வரலாற்றை அகிலமெல்லாம் பரவச்செய்துவரும் இத்தமிழறிஞர், 1981 இல் கொடுமணல் தொடங்கி 2011 இல் தென்முகம் வெள்ளோடு வரை 60 ஊர்களுக்குக் குலக் காணியாளர் வரலாறு எழுதி சாதனை படைத்துள்ளார்.

கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி, காணிப்பாடல், இலக்கியம் வழியாக ஆதாரபூர்வமாக ஆய்வு செய்து, ‘கொங்கு வேளாளர் குல வரலாறு’ என்னும் தலைப்பில் அருமையானதொரு நூலை எழுதி கொங்குச் சமுதாயத்திற்குப் பெருங்கொடையாக அளித்துள்ளார்.

புலவர் க.பழனிசாமி, எஸ்.ஏ.ஆர்.சின்னசாமி கவுண்டர், டி.எம்.காளியப்பா, புலவர் வி.இராமமூர்த்தி, க.கிருஷ்ணசாமி, கு.சேதுராமன், நல்.நடராசன், புலவர் தே.ப.சின்னசாமி, கே.எஸ்.மோகனசுந்தரம், புலவர் இரா.வடிவேலனார், பொறிஞர் இரா.இரவிக்குமார் முதலானோர் கொங்கு வேளாளர் குல வரலாறு பற்றி ஏற்கனவே நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளனர். இப்பெருமக்களைத் தொடர்ந்து கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், காணிப்பாடல்கள், சங்க இலக்கியம் முதல் சமீபகால இலக்கியப் பாடல்கள் ஆகியவற்றைப் பல்லாண்டுகளாக ஆய்ந்து, இன்றுவரை கிடைத்துள்ள

வரலாற்றுச் செய்திகளை முழுமையாகத் தொகுத்து அரிதின் முயன்று கொங்குக் குலக்களஞ்சியமாக இந்நூலைப் படைத்துள்ளார், கொங்குமாமணி புலவர் செ.இராசு அவர்கள்.

கொங்குப்புலவர் பவணந்தி முனிவர் ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல; காலவகையினானே'' என்று பாடியதற்கேற்ப, சமுதாயத்தில் திருமணம், சடங்கு, சீர், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை போன்றவற்றில் பல மாறுதல்கள் நடைபெற்றாலும், மாறாத அடையாளமாக இன்று இருப்பது குலமும், குலதெய்வக் கோயிலும்தான்.

தொன்மையான பண்பாட்டுச் சிறப்பும் , வரலாற்றுப் பெருமையும் கொண்டுள்ளது கொங்குவேளாளர் சமுதாயம். பெரும் புலவர்களால் போற்றப்பட்டு புகழோடு வாழ்ந்தவர்கள் கொங்கு வேளாளர்கள். இரு கொங்கு வேளாளர்கள் சந்தித்துக் கொண்டால் 'குலம்' என்ன வென்று விசாரிப்பது இன்றும் வழக்கமாக உள்ளது. ஒரே குலமாக இருந்தால் ''பங்காளிகள், அண்ணன் தம்பி'', என உறவு கொண்டாடும் சமுதாயம், கொங்குச் சமுதாயம்

புலவர் செ.இராசு அவர்கள் இந்நூலில் 102 கொங்கு வேளாளர் குலங்களின் வரலாற்றை எளிய, இனிய நடையில் தக்க சான்றுகளுடன் தெளிவாகவும், விரிவாகவும் எழுதியுள்ளார். 392 கல்வெட்டுகள் பற்றிய செய்திகளையும், 71 செப்பேடு பட்டயங்கள் பற்றிய விவரங்களையும் ஆராய்ந்து, கல்வெட்டுகள் 82 குலங்கள் குறித்தும், செப்பேடு பட்டயங்கள் 56 குலங்கள் குறித்தும் குறிப்பிடுவதாகக் கூறும் புலவர் இராசு அவர்கள் ஒவ்வொரு குலத்தைப் பற்றியும் இலக்கியப்பாடல்கள், காணிப்பாடல்கள் மூலமாகவும் தெளிவுபட எழுதியுள்ளது மிகவும் பாராட்டத்தக்கதும், போற்றத்தக்கதுமாகும்.

102 குலங்கள் பற்றி மட்டுமல்லாது பத்து கொங்கு வேளாளர் கிளையினர் 1. கொங்கு நாட்டு வேளாள கவுண்டர்கள், 2. படைத்தலைக் கவுண்டர்கள், 3. வடகரைக்கவுண்டர்கள் (நரம்பர்), 4. பாலவேளாள கவுண்டர்கள், 5.முடமாண்டார் கவுண்டர்கள் 6.திருமுடிக்கவுண்டர்கள், 7. மலைக்கவுண்டர்கள், 8.குறும்ப கவுண்டர்கள், 9. பாலக்காடு மன்னாடியார்கள் 10. கொடைக்கானல் குன்னுவ மன்னாடியார்கள்–பற்றிய வரலாற்றுச் செய்திகளும் விரிவாகவும் விளக்கமாகவும் தக்கச்சான்றுகளுடனும் இந்நூலில் இடம் பெற்றிருப்பது சிறப்புக்குரியதாகும்.

கேரள மாநிலத்துப் பாலக்காடு மாவட்டத்தில் பாலக்காடு, கொல்லங்கோடு, சித்தூர், ஆலத்தூர் வட்டங்களில் பரவலாக வாழும் மன்னாடியார் அனைவரும் கொங்கு வேளாளர்களே யாவர் எனக்குறிப்பிடுகிறார், தொல்லியல்–கல்வெட்டுத்துறையில்

சாதனைகள் புரிந்தமைக்காக தமிழக அரசின் உ.வே.சா. விருதைக் கடந்த தமிழ்ப்புத்தாண்டு தின விழாவில் தமிழக முதல்வரிடமிருந்து பெற்ற புலவர் இராசு அவர்கள்.

"தென்கரை நாட்டுச் சங்கரண்டாம்பாளையம் பெரியகுலம் வேணாடுடையாரோடு தொடர்புடையவர் அங்கராத்து சங்குண்ணி வலிய மன்னாடியார்–மேனக்கத் லட்சுமி அம்மா ஆகியோர். அவர்கள் மகன் கோபாலமேனன். கோபாலமேனன் மனைவி சத்தியபாமா. சத்தியபாமா வடவனூர் மருதூர் இல்லம் சார்ந்தவர். வேளாளர் என்று ஆவணத்திலேயே பொறிக்கப்பட்டவர். இத்தம்பதியர்க்கு 5 மக்கள்–கமலாட்சி, எம்.ஜி.சக்ரபாணி, சுபத்திரா, பாலகிருஷ்ணன், எம்.ஜி.இராமச்சந்திரன் ஆகியோர் ஆவார். ஆம், தமிழக முன்னாள் முதல்வர் அமரர் எம்.ஜி.இராமச்சந்திரன் கொங்கு வேளாளர்களின் பெரிய குலத்துப்பிள்ளை".

இவ்வாறு இந்நூலில் குறிப்பிட்டுள்ள புலவர் இராசு அவர்கள், முன்னாள் முதல்வர் அமரர் எம்.ஜி.ஆர். கொங்கு வேளாளர் என்றும், அவருடைய குலம் பெரிய குலம் என்றும் தக்க பல சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.

கொங்கு வேளாளர் குலங்களைத் தொகுத்துக் கூறும் பாடல்களான அ) அலகுமலைக் குறவஞ்சி, ஆ.கொடுமணல் இலக்கியங்கள், இ) வேளாளர் கீர்த்தி 96 குலத்துப் பாடல் ஈ) வேளாளர் குலக்கும்மி உ) வேளாளர் சிறப்புப்பாடல்கள் (நெறி தவறாதவர், மிக்கான சமூகம், வாசல் சிறப்பு, வேளாளர் துணை, வேளாளச்சாமி, சோறிடும் தெய்வம், மேழித்தெய்வம், வேளாளர்களைப் புகழ்ந்து பாடிய புலவர்கள் ஆகியவற்றை இந்நூலில் சேர்த்துள்ளது இந்நூலுக்கு மேலும் சிறப்பு சேர்த்துள்ளது.

'அக்கினி' தொடங்கி 'வேந்தன்' வரை 102 குலங்களின் வரலாற்றை தக்கச்சான்றுகளுடனும், ஆதாரங்களுடனும் படிப்போர் வியந்து போற்றும் வண்ணம் ஆய்ந்து எழுதியுள்ள புலவர் இராசு அவர்களுக்கு கொங்குச்சமுதாயம் மிகவும் கடமைப்பட்டுள்ளது என்றால் அது மிகையன்று.

இந்நூல் கொங்கு வேளாளர்கள் அனைவருக்கும் பயன்படும் ஓர் அரிய பெட்டகமாகும். ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய ஆவணக்களஞ்சியமாகும். அனைவரும் படித்து வரலாற்றைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளவும், பயன்பெறவும் இந்நூலைப் படைத்துள்ள புலவர் இராசு கொங்குச் சமுதாயத்திற்குப்பெரும் பெருமை சேர்த்தவராவர்.

முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்
செயற்குழு உறுப்பினர்

❖❖❖❖❖

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர் | : | M.C.ரமேஷ்குமார் BE., (ECE) S/w Er.USA |
| பிறந்த தேதி | : | 24-02-1981, சுவாதி (2), துலாம், ரிஷபம் 11.55 a.m. |
| உடன்பிறந்தோர் | : | அக்கா 1 சுபம் |
| உயரம் | : | 5'9'' சிவப்பு சொத்துவிபரம் நேரில் |
| குலம் | : | தூரன், மோழியபள்ளி ஸ்ரீ அண்ணமார் சுவாமி |
| தொடர்பு தந்தை | : | M.S. சின்னசாமி B.Sc.,<br>ஸ்ரீ பராசக்தி இல்லம், 3/1, எஸ்.கே.சி. ரோடு முதல் தெரு,<br>சூரம்பட்டி நால்ரோடு, ஈரோடு – 638009<br>போன் : 0424–2272390, 9443094707 |
| கல்வித்தகுதி எதிர்பார்ப்பு | : | B.E., B.Tech., MCA., M.Sc., (Compt.) |

| | | | |
|---|---|---|---|
| | | லக்னம் | |
| சூரி சுக் செவ் | இராசி | | சந் |
| புத கேது | | | |
| | | சந்தி | குரு சனி |

| | | | |
|---|---|---|---|
| | லக் செவ் | குரு சனி கேது | |
| | அம்சம் | | |
| சந் சுக் | | | |
| | ராகு | சுக்ரன் | புதன் |

❖❖❖❖❖

## மாவிலைத் தோரணம் கட்டுவதன் தத்துவம் என்ன?

மாவிலை ஒரு கிருமிநாசினி, இதற்கு துர்தேவதைகளை வீட்டிற்குள் நுழைய விடாமல் தடுக்கும் சக்தி உண்டு. மேலும் மாவிலை அழுகுவது கிடையாது. முறையாக காய்ந்து உலரும். இதுபோல் வாழ்க்கையும் கெட்டுப்போகாமல் நீண்டகாலம் நடைபெற்று முற்றுப்பெற வேண்டும் என்ற நம்பிக்கையுடன் மங்களம் பெருக மாவிலைத் தோரணம் கட்டுகிறோம்.

❖❖❖❖❖

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : குழந்தைவேல் B.E |
| பிறந்த தேதி | : 29-09-1982, புதன் 9.20 p.m. |
| இராசி | : கும்பம் |
| நட்சத்திரம் | : அவிட்டம் 3ம் பாதம் |
| லக்னம் | : ரிஷபம் 7ல் செவ்வாய், 2ல் ராகு, 8ல் கேது |
| நிறம், உயரம் | : சிவப்பு, 5.5 அடி |
| தொழில் | : Software Engineer<br>Qualcom Company California State USA |
| வருமானம் | : 1 லட்சம் டாலர் வருடத்திற்கு |
| குலம் | : கண்ணகுலம், காளமங்கலம் குல விளக்கம்மன் கோவில் |
| தந்தை தாயார் பெயர் | : K.பழனிச்சாமி, செல்லம்மாள் |
| முகவரி | : 185C/11, மேட்டுப்பட்டி (கும்மிச்சம்பட்டி)<br>ஒட்டன்சத்திரம் (tk) திண்டுக்கல் Dt |
| ரத்த வகை | : O +ve |
| எதிர்பார்ப்பு | : B.E., B-Tech., / MCA / M.Sc., (IT) படித்த பெண் தேவை |
| தொலைபேசி | : 9788740285, 04553, 244110 |

| | | | |
|---|---|---|---|
| | ல | ரா | |
| சந் | இராசி | | |
| | | | |
| கே | செ | குரு | சூபு சுச |

| | | | |
|---|---|---|---|
| | சூ குரு | | |
| ரா சு | அம்சம் | | |
| | | சுக் | சனி கே |
| ல பு | செ | சந் | |

செவ்வாய் திசை இருப்பு 2 வருடம் 4 மாதம் 24 நாள்

❖❖❖❖❖

## மணமகள் தேவை

ஜாதகர் பெயர் : P.ராகுல்
பிறந்த தேதி : 16-02-1984, வியாழக்கிழமை 9.00 a.m.
நட்சத்திரம் : ஆயில்யம் கூட்டம் : கூரை
கல்வி : B.E., M.S (UK)
தொழில் : Executive in reputed MNC firm
முகவரி : C/o. M.A.ராமமூர்த்தி PALM Apartments,
Old No.23, New No.45, 4th Main Road,
R.A.Puram, Chennai – **600028.**
போன் : 044-42106944, 9444043039

| | | | |
|---|---|---|---|
| லக் | | ராகு | |
| சூரி | இராசி | | சந் |
| புத சுக் | | | |
| குரு | கேது | சனி செவ் | |

| | | | |
|---|---|---|---|
| | சனி செவ் | | புத ராகு |
| | அம்சம் | | குரு |
| சந் சுக் | | | |
| கேது | லக் | சூரி | |

❖❖❖❖❖

## மணமகள் தேவை

ஜாதகர் பெயர் : R.K.மணிமொழியன்
படிப்பு B.E., M.S., (USA)
வேலை Software Eingineer California (USA)
பிறந்த தேதி : 16-09-1982 நிறம் / உயரம் : சிவப்பு 5'8''
குலம் : பெருங்குடி கூட்டம், (வாங்கல், கரூர்)
ஊர் : பீளமேடு, கோயமுத்தூர்

பூரம் நட்சத்திரம் 1ம் பாதம், சிம்ம ராசி, கும்ப லக்னம், பூர்வீகம் நாமக்கல், தந்தை பொறியியல் கல்லூரியில் பேராசிரியர், ஒரு சகோதரி Software Engineer அமெரிக்காவில் வேலையில் உள்ளவர். வேலைக்குப் போக விருப்பம் உள்ள படித்த தகுதியான மணமகள் தேவை.

தொடர்புக்கு : 9843558487, 9488441289

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : பி.கோகுலகிருஷ்ணன் |
| பிறந்த தேதி | : 22–09–1981 செவ்வாய் |
| பிறந்த நேரம், இடம் | : 14.19 IST, ஈரோடு |
| நட்சத்திரம் | : புணர் பூசம் (பாதம் 2), ராசி : மிதுனம், லக்கனம் : மகரம் |
| தந்தை பெயர் | : கே.என்.பாலசுப்பிரமணியன் |
| தாயார் பெயர் | : திலகவதி |
| தந்தை தொழில் | : Textile Export Business |
| உடன் பிறப்பு | : 1 அக்கா டாக்டர், ஆஸ்திரேலியா, திருமணமானவர்; மாப்பிள்ளை – டாக்டர் |
| கல்வி | : M.Sc., International Business, London, (UK), MA., (Marketing) (UK) |
| தொழில் | : Own Textile Export Business, Karur |
| வருவாய் | : மாதம் சுமார் Rs. 2,50,000/- |
| உயரம் / நிறம் | : 5.6 அடி, நல்லசிவப்பு |
| குலம் / கோவில் | : புலியூர் பெருங்குடி குலம், புலியூர் ஸ்ரீ முச்சிலியம்மன், ஸ்ரீ காளியம்மன் |
| சொத்து | : பங்களா, பூமி, வங்கி வைப்பு நிதி – முதலியன ரூ. 10 கோடி |
| எதிர்பார்ப்பு | : நல்ல பாரம்பரியமான குடும்பப் பின்னணி, நன்கு படித்த குணவதியான குடும்பப் பாங்கான பெண். |

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி | | செ ரா |
| லக் கே | | | |
| | | புத சுக் | சூரி குரு, சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சந் | சனி |
| சூரி கே | நவாம்சம் | | குரு |
| லக் | | | ரா |
| செ | | புத | |

தொடர்புக்கு :
தந்தை : கே.என்.பாலசுப்பிரமணியன் செல் : 98430 79736
தாய் : திலகவதி செல் : 9047034549

❖❖❖❖❖